டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 9.10.2024 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 095 - Madurai | Online Edition

# துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு விலை கடந்த மூன்று மாதங்களில் கிட்டத்தட்ட 10% சரிவு

புது தில்லி, அக்.8

நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் நிதி கரே இந்திய சில்லறை விற்பனையாளர்கள் சங்கத்தினருடனும், பெரிய ஒழுங் கமைக்கப்பட்ட சில்லறை விற்பனை சங்கிலி நிறுவனத் தினருடனும் நேற்று (8.10.24) ஒரு கூட்டத்தை நடத்தினார். முக்கிய பருப்பு வகை களின் விலை நிலவரம் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது. பண்டிகை காலத்தை கருத்தில் கொண்டு இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய நுகர்வோர் விவகாரங்கள் துறைச் செயலாளர், இந்த ஆண்டு காரீப் பருவத்தில் பருப்பு வகைகளின் அதிக விளைச்சல் காரணமாக கடந்த சில மாதங்களில் பெரும்பாலான பருப்பு வகைகளின் மண்டி விலைகள் குறைந்து வருகின்றன என்றார்.

கடந்த மூன்று மாதங்களில் முக்கிய மண்டிகளில் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்பு விலைகள் சராசரியாக கிட்டத்தட்ட 10% குறைந்து உள்ளன என்று அவர் கூறினார். ஆனால் சில்லறை விலைகள் இதேபோன்று குறையவில்லை என்று அவர் தெரிவித்தார். மொத்த மண்டி விலைகளுக்கும் சில்லறை விலைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள், உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

இந்த கூட்டத்தில் ரிலையன்ஸ் ரீடெய்ல் லிமிடெட், வீல் மார்ட், டி மார்ட், ஸ்பென்சர், மோர் ரீடெய்ல் உள்ளிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# வயல் ஆய்வு மேற்கொண்ட வேளாண்மை இணை இயக்குநர்



சிவகங்கை, அக்.8

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டாரத்தில் கடந்த ஒரு வார காலமாக நல்ல மழை பெய்து வருகிறது. தற்பொழுது நெற்பயிர்கள் நன்கு முளைத்து பத்து சென்டிமீட்டர் உயரத்தில் இளம் பயிராக உள்ளது. நேற்று 8.10.24ல் சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர மகாலிங்கம் வயல் ஆய்வு மேற்கொண்டார். தேவகோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கமலா தேவி, உடனிருந்தார். அதிக மழையால் இளம் நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கி அழுகி சேதாரம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா என்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி தேவகோட்டை வட்டாரத்தில் உள்ள மாவிடுதிக் கோட்டை, திடக்கோட்டை மற்றும் தலக்காவயல் கிராமங்களில் வயல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாவிடுதிக்கோட்டை கிராமத்தில் பைபாஸ் ரோடு அருகே உள்ள நெல் வயல்களில் மழை நீர் தேக்கம் கூடுதலாக காணப்பட்டது. விவசாயிகளிடம் கூடுதல் மழை நீரை வெட்டி வெளியேற்ற கேட்டுக்கொண்டு நடவடிக்கை எடுக்கப் பட்டது. மாவிடுதிக்கோட்டை கிராமத்தில் உள்ள நெல் வயல்கள் மேடான பகுதியில் உள்ளது. சாதாரண மாக இங்கு பெய்யும் அதிக மழை நீர் தாழ்வான பகுதியான கடகம்பட்டி கண்மாய்க்கு சென்று விடும். விவசாயிகள் தங்களது நெல் வயலில் உள்ள அதிகப் படியான மழை நீரை வெட்டி விட்டாலே தாழ்வான பகுதிக்கு சென்று விடும். இளம் நெற் பயிரில் அதிக நாள் தண்ணீர் தேங்குவதை தவிர்க்க வேண்டும். தற்பொழுது இளம் பயிருக்கு எந்த பிரச்சனையும் ஏற்பட வாய்ப்பில்லை என விவசாயிகள் கருத்து தெரிவித்தார்கள். மேலும் நெற்பயிர் விதைத்த 20 முதல் 25 நாட்களில் 10 கிலோ சிங் சல்பேட் அல்லது ஐந்து கிலோ நெல் நுண்ணுரம் ஏக்கர் ஒன்றுக்கு இட்டு மகசூல் இழப்பை தவிர்க்க வேளாண்மை உதவி இயக்குனர் தேவகோட்டை கேட்டுக் கொண்டார். தற்பொழுது வேளாண்மை விரிவாக்க மையம் தேவகோட்டையில் 50 சதவீத மானியத்தில் இவைகள் இருப்பதால் விவசாயிகள் வாங்கி பயனடைய தேவகோட்டை, வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தி வேளாண் இடுபொருட்கள் பெறும் வசதி வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்

ஈரோடு, அக்.8

ஈரோடு மாவட்டம், ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மா.சாமுவேல் தெரிவித்துள்ள செய்தியில், வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு தேவையான இடுபொருட்களான விதை நெல், உளுந்து, மக்காச்சோளம், நிலக்கடலை, உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், ஜிங்க் சல்பேட், டிரைக்கோ டெர்மா விரிடி, சூடோமோனாஸ், மெட்டாரைசியம் உள்ளிட்ட அனைத்து இடுபொருட்களும் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதற்கு முன்பு வரை விவசாயிகள் வாங்கும் இடுபொருட்களுக்கு ரொக்கமாக பணம் செலுத்தும் முறையே இருந்து வந்தது. ஆனால் தற்சமயம் மாறி வரும் சூழலுக்கு ஏற்ப விவசாயிகள் தாங்கள் வாங்கும் இடுபொருட்களுக்கு டிஜிட்டல் முறையிலான ஏடிஎம் கார்டு, டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, நெட் பேங்கிங், கூகுள் பே, போன் பே,பே டி எம் போன்ற அனைத்து மின்னணு பரிவர்த்தனைகள் மூலம் இடுபொருட்களுக்கு பணம் செலுத்தலாம்.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

மின்னணு பரிவர்த்தனை மேற்கொள்வதற்கு தேவையான அனைத்து வசதிகளும் ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை விவசாயிகள் பயன்படுத்தி தாங்கள் வாங்கக் கூடிய பொருட்களுக்கான தொகையை டிஜிட்டல் பரிவர்த்தனை மூலம் செலுத்தி பயனடையுமாறு ஈரோடு மற்றும் சென்னிமலை வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அதிக மகசூலுக்கு விதைப்பரிசோதனை அவசியம்!

விருதுநகர், அக்.8

விருதுநகர் மாவட்டத்தில் மக்காச்சோளம், நெல், பயறு வகைகள், பருத்தி மற்றும் கடலை ஆகியன பிரதான பயிர்களாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. தரமான விதைகளைப் பயன்படுத்தும் போது அதிக மகசூல் பெற முடியும். நெல், மக்காச்சோளம் போன்ற தானியங்களுக்கு 80 முதல் 90 சதவீதமும், பயறு வகைகளுக்கு 75 சதவீதமும், ரகப்பருத்திக்கு 65 சதவீதமும், வீரிய ஒட்டு பருத்திக்கு 75 சதவீதமும், எள்ளுக்கு 80 சதவீதமும் மற்றும் கடலைக்கு 70 சதவீதமும் முளைப்புத் திறன் இருக்க வேண்டும்.




மேலும் அனைத்து விதைகளிலும் குறைந்தபட்சம் 97-98 சதவீத சுத்தத் தன்மை இருக்க வேண்டும். விதையின் ஈரப்பதம் நெல், மக்காச்சோளம் போன்ற தானிய வகைகளுக்கு முறையே 13, 12 சதவீதமும் பயறு மற்றும் கடலை வகை விதைகளுக்கு 9 சதவீதமும் இருத்தல் வேண்டும். சான்று பெறப்பட்ட தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

ஆகவே, தரமான விதைகளைத் தேர்வு செய்ய விவசாயிகள் தங்களின் விதைகளை விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் அலுவலக வளாகத்தில் இயங்கிவரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து பயன்பெறலாம் என விதைப் பரிசோதனை அலுவலர் மகாலெட்சுமி, வேளாண்மை அலுவலர் சாய்லட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்துள்ளனர். மேலும் விபரங்களுக்கு 98944 21833 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 08.10.2024 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 | |
| 1A | கத்திரி(Simron) | 30 | 35 | 57 | உருளை (பிற) | 36 | 40 | |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 45 | 57A | உருளை(ஊட்டி) | 65 | 70 | |
| 2 | வெண்டை | 30 | 36 | 58 | மேரக்காய் | 20 | 24 | |
| 3 | தக்காளி (நாடு) | 42 | 45 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 | |
| 4 | தக்காளி ஆப்பிள் | 42 | 45 | 60 | கேரட் | 50 | 54 | |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 68 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 45 | 48 | |
| 6 | புடலை | 20 | 25 | 62 | நூல்கோல் | 40 | 44 | |
| 7 | பீர்க்கன் | 24 | 28 | 63 | டர்னிப் | 40 | 45 | |
| 8 | சுரைக்காய் | 20 | 24 | 64 | மு.கோஸ் | 20 | 25 | |
| 9 | பாகற்காய் | 30 | 36 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 | |
| 10 | கொத்தவரை | 28 | 32 | 66 | காளிபிளவர் | 55 | 60 | |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 190 | 200 | |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 300 | |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 35 | 69 | இஞ்சி | 50 | 130 | |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 40 | 70 | புருக்கோலின் | 100 | 120 | |
| 15 | சி.வெங்காயம் | 48 | 52 | 71 | பென்னி பீன்ஸ் | 100 | 110 | |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 45 | 52 | 72 | குடமிளகாய் | 55 | 60 | |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 34 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 | |
| 18 | பச்சை மொச்சை | 40 | 46 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 | |
| 19 | முருங்கை | 60 | 66 | 71A | | | | |
| 20 | தேங்காய் | 50 | 54 | | | | | |
| 21 | | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 120 | 130 | |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 | |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 | |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 200 | 240 | |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 70 | 80 | |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 130 | 200 | |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 | |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 40 | 70 | |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 55 | |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 | |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 | |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 | |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 | |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 | |
| 40 | கோவக்காய் | 30 | 34 | 91 | பூவன் | 45 | 50 | |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 | |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 | |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 | |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 | |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 30 | 35 | |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 | |
| 47 | கண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 | |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 | |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 | |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 | |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 | |
| 52 | | | | | | | | |
| 53 | ஸ்வீட் கார்ன் | 35 | 40 | | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 36 | | | | | |

# மணிலாவில் அதிக மகசூல் பெற்றிட வேளாண் துறை தகவல்

கள்ளக்குறிச்சி, அக்.8



கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சராசரியாக 6700 எக்டர் பரப்பளவில் விவசாயிகள் மணிலா பயிர் சாகுபடி செய்து வருகின்றனர். மணிலாவில் திரட்சியான பருப்புகள் கொண்ட இரகங்களில் காய்களின் பருப்பின் வளர்ச்சி குறைபாட்டினை தவிர்த்து நல்ல வளர்ச்சி அடைந்த முழுமையான பருப்புக்களை பெறுவதற்கு பல ஊட்டச்சத்துக்களை கலந்து தெளிக்க வேண்டும்.




இந்த கலவையை தயாரிக்க டி.ஏ.பி 2.5 கிலோ, அம்மோனியம் சல்பேட் 1 கிலோ மற்றும் போராக்ஸ் (வெண்சுரம்) 0.5 கிலோவினை 37 லிட்டர் தண்ணீரில் ஒன்றாக கலந்து ஒரு இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும். மறுநாள் காலை அந்த கலவையை வடிகட்டினால் 32 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து நீர் கிடைக்கும். இதனை 468 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து 500 லிட்டர் அளவில் தயார் செய்ய வேண்டும். இதனுடன் பிளானோபிக்ஸ் 350 மில்லியை இதில் சேர்த்து விதைத்த 25 மற்றும் 35-ம் நாட்களில் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதன் மூலம் நிலக்கடலையில் திரட்சியான காய்கள் பெறுவதுடன், கூடுதல் மகசூலையும் பெறலாம்.

மேலும் சாகுபடிக்கு தேவையான உயர் விளைச்சல் ரக விதைகள், நுண்ணுரம், திரவ உயிர் உரங்கள் மற்றும் இதர இடுபொருட்கள் இம்மாவட்ட அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பொ. அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

# உலக பருத்தி தினம் 2024 - மாநில அளவிலான பருத்தி பயிலரங்கம் மற்றும் கண்காட்சி

பெரம்பலூர், அக்.8

பெரம்பலூர், வேப்பந்தட்டை பருத்திஆராய்ச்சி நிலையத்தில் உலக பருத்தி தின (7.10.24)வேளாண் கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம், ஆடுதுறை இயக்குநர் டாக்டர். சுப்ரமணியன், பெரம்பலூர் இணை வேளாண்மை இயக்குநர் கீதா, பெரம்பலூர் கே.வி.கே தலைவர் டாக்டர். நேதாஜி மாரியப்பன் மற்றும் பருத்திஆராய்ச்சி நிலைய தலைவர் டாக்டர். சோமசுந்தரம் ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர்.

இக்கண்காட்சியில், இப்கோ நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, சாகரிகா மற்றும் இதர உரங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. இப்கோ கள அலுவலர் பருத்தியில் நானோ உரங்கள் பயன் படுத்தும் முறை மற்றும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார். கள அலுவலர் கூறியதாவது, பருத்தி நடவு செய்த 45-50 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 500 மி.லி. நானோ டி.ஏ.பி திரவ உரத்தை இலை வழியில் முதல் தெளிப்பாகவும் மற்றும் நடவு செய்த 60-65 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 500 மி.லி. நானோ யூரியா பிளஸ் திரவ உரத்தை இரண்டாம் தெளிப்பாக தெளிக்கவும் என வலியுறுத்தினர்.

மேலும், நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிப்பதனால் விவசாயிகளுக்கு உரச்செலவு குறைந்து மகசூல் அதிகரிக்கும் என வலியுறுத்தினார். நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிக்கலாம் என கூறினார். பின்னர், இப்கோ நிறுவனத்தின் விவசாயிகளுக்கான இலவச விபத்துக் காப்பீடு திட்டமான சங்கடஹறரன் பீமா யோஜனாவின் மூலம் நானோ உரங்கள் வாங்கினால் ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீடு பெறலாம் என்றார்.



# கல்லணை கால்வாய் பாசன பகுதிகளை பார்வையிட்ட வேளாண்மை துறையினர்



தஞ்சாவூர், அக்.8

தஞ்சாவூரில் கல்லணை கால்வாயில் இருந்து நெய்வாசல் தென்பாதி வாய்க்கால் வடசேரி வாய்க்கால் கல்யாண ஓடை வாய்க்கால் ராஜா மடம் வாய்க்கால் அலிவலம் வாய்க்கால் சூரக்கோட்டை ஈச்சங்கோட்டை வெட்டிக்காடு ஊரணிபுரம் ஆகிய நீர் ஒழுங்குகள் ஆகியவற்றை தஞ்சாவூர் மாவட்ட அனைத்து வட்டார வேளாண்மை அலுவலர்கள் நேற்று பார்வையிட்டு கல்லணை கால்வாயில் பாசன பகுதிகளை பற்றியும் அறிந்து






கொண்டனர். கல்லணை கால்வாயில் குறுக்கே சூரக்கோட்டை அருகில் கடந்து செல்லும் வல்லம் வாரி ஆற்றின் கீழே கல்லணை கால்வாய் கடந்து செல்வதையும் வெட்டிக்காடு நீர் ஒழுங்கியின் அருகே மகாராஜா சமுத்திரம் காட்டாறு கீழே கடந்து செல்வதையும் நேரடியாக பார்த்து தெரிந்து கொண்டனர். மேலும் கல்லணை கால்வாயில் மேல்பாதி ஆன ஒன்று முதல் 77 கிலோ மீட்டர் வரையிலான பாசன பகுதி களையும் அந்தந்த வாய்க்கால்களில் முறை வைத்து விடப்படும் நீரின் அளவுகளையும் பற்றி அறிந்து கொண்டனர். ஒவ்வொரு மாதமும் காட்டுத் தோட்டம் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் நடத்தப்படும் மண்டல கருத்து கூட்டத்தின் ஒரு பகுதியாக இந்த கல்லணை கால்வாய் பாசன பரப்பு அறிந்து கொள்ளும் நிகழ்ச்சி வேளாண் இணை இயக்குனர் சுஜாதா ஏற்பாடு செய்திருந்தார். வேளாண் துணை இயக்குனர்கள் மாலதி அய்யம்பெருமாள் ஆகியோர் பாசன வாய்க்கால்கள் குறித்த அதிக விவரங்களை வேளாண் துறை அலுவலர்களுக்கு எடுத்துக்கூறினர்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மக்காசோளத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி

மதுரை, அக்.8

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில் குப்பல்நத்தம் ஊராட்சிக்கு உட்பட்ட கு.ஆண்டிபட்டி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் மக்காசோளத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி 8.10.24 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை இணை இயக்குநர் ப.சுப்புராஜ் தலைமையேற்று மத்திய மாநில திட்டங்கள் பற்றியும், தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற விவசாயிகள் முன்வர வேண்டும். விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வேண்டும் என விரிவாக எடுத்த கூறினார்.

இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் இரா.இராமசாமி, பேசுகையில் மக்காசோளத்தில் பயிர்களுக்கு மஞ்சல் வண்ணஅட்டை, விளக்குபொறி, இனகவர்ச்சி பொறி போன்றவைகள் பயன்படுத்துவதோடு இயற்கை உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, ரைசோபியம் பயன்படுத்துவும், ஆங்காங்கே ஊடுபயிராக உளுந்து, தட்டை பயிறு, துவரை சாகுபடி செய்வதன் மூலம் பூச்சி நோய் தாக்குதலில் இருந்து பயிரை பாதுகாக்கலாம் என்பதையும் விரிவாக எடுத்த கூறினார்.

இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் பாண்டியன், பேசுகையில் கலைஞரின் ஒருங்கினைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பற்றியும் மானியங்கள் பற்றியும் டிஜிட்டல் பணபரிவர்த்தணை மூலம் விவசாயிகள் வேணாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட்கள் வாங்கி கொள்ளலாம்.

இயற்கை வேளாண் பயிற்றுநர் கா.காமேஸ், பேசுகையில் தற்பொது உள்ள சூழ்நிலையில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த இயற்கை வழிமுறைகளில் முலிகை பூச்சி விரட்டி முக்கிய பங்கு வகிக்கின்றது. ஐந்திலை கரைசல் தாயரிக்கும் முறைகள் பற்றியும் செயல்பாடுகள் பற்றியும் பயிர்களுக்கு 10 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும் என்பதை விவசாயிகளிடம் அறிவுறுத்தினார்.

அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா பயிர்களுக்கு தேவையான பதினாறு வகை சத்துக்கள் குறித்தும் அட்மா திட்டம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில் நுட்ப மேலாளர் சத்தியா பிரித்திவிராஜன் செய்து இருந்தனர். வேளாண்மை உதவி அலுவலர் காமேஸ் நன்றி கூறினார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# எம்.எஸ் எம்.இ (M.S.M.E) என்பது என்ன? அதனுடைய வகை பாடு? பயன் பற்றிய தெரியுமா?

வேளாண்மை சார்ந்த உழவர்கள் தங்களுடைய வேளாண் விளை பொருட்களை மதிப்புக்கூட்டி, உணவு பதப்படுத்தி விற்பனை செய்யும் கலாச்சாரம் தற்போது வேகமாக பரவி வரும் நிலையில், எம்.எஸ்.எம்.இ என்பதை பற்றியும் அதனுடைய செயல்பாடுகளை பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய கால கட்டத்தில் விவசாயிகள் உள்ளனர். எனவே, இந்த பதிவில் நாம் அதைப்பற்றி காண்போம்.

MSME என்பது சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை குறிக்கும். (MICRO, SMALL, MEDIUM ENTERPRISES). இது புத்தொழில்கள் மற்றும் ஒப்பிட்டுளவில், குறைந்த முதலீடும் வரையறுக்கப்பட்ட செயல்பாடுகளும், கொண்ட சிறு தொழில் முன்னெடுப்புகளை உள்ளடக்கியதாகும்.

**MSMEயின் சிறப்பம்சம் என்ன?**

இவை பெரும் தொழில் நிறுவனங்களோடு, ஒப்பிடுகையில் குறைந்த முதலீட்டில் அதிக வேலை வாய்ப்பை தருவதன் மூலம் நான் பின்தங்கிய மற்றும் ஊரகபகுதிகளில் தொழில் மயப்படுவதன் மூலமாக நாட்டின் வருமானமும் வளமும் சமச்சீராக பங்கிடப்படுவதிலும் பங்காற்று கின்றன. பெரும் தொழிலுக்கு துணை செய்வதோடு, நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றன.

**MSMEயின் வகைபாடுகள்?**

**1) உற்பத்தி தொழில் நிறுவனங்கள்**

பொருள் உற்பத்தியில் ஈடுபடும் தொழில் நிறுவனங்கள் (PRODUCTION ORIENTED) உற்பத்தி தொழில் நிறுவனங்கள் எனப்படும். அவை இயந்திர தளவாடங்களில் செய்யும் முதலீடு மற்றும் ஆண்டு விற்று முதலின் அடைப்படையில் வரையறுக்கப்படுகின்றன.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

**2) சேவை தொழில் நிறுவனங்கள்**

சேவை தொழில் (SERVICE ORIENTED) பெரும் தொழில் நிறுவனங்கள் அவை கருவிகளின் முதலீடு மற்றும் ஆண்டு விற்று முதலீட்டின் அடிப்படையில் வகைபடுத்தப்பட்டது.

**MSMEயின் பகுப்பு முறை ?**

1.7.2020 முதல் நடைமுறைக்கு வந்த ஒன்றிய அரசின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள கூட்டு நியதிகளின் அடிப்படையில் சிறு, குறு மற்றும் நடுத்தரமாக பகுப்பிடப்பட்டுள்ளது.

அவை,

பொருள் உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தி தொழில் நிறுவனங்கள் மற்றும் சேவை தொழில் நிறுவனங்களின் முறையே 1 கோடிக்கு மிகாமல் மற்றும் ஆண்டுக்கு விற்று முதல் 5 கோடிக்கு மிகாமல் இருந்தால் குறு தொழில் (MICRO ENTERPRISE) என்றும் 10 கோடிக்கு மிகாமல் முதலிடும் ஆண்டு விற்று முதலிடு 50 கோடிக்கும் மிகாமல் இருந்தால் சிறு தொழில் (SMALL ENTER-PRISE) என்றும் 50 கோடிக்கு மிகாமல் மற்றும் ஆண்டு விற்று முதலிடு 250 கோடிக்கு மிகாமல் இருந்தால் நடுத்தர தொழில் (MEDIUM ENTERPRISE) வகை படுத்தப்பட்டுள்ளது.

**விண்ணப்பிப்பது எப்படி?**

தேவைகளை தெரிந்து கொண்டு உரிய ஆவணங்களுடன் (ON-LINE) மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.

மானியம் பெறுவதற்கான தொழில்கள். உணவுசார்ந்த பதப்படுத்தும் தொழில்கள் மற்றும் புதிய விவசாய அடிப்படை யிலான சிறு, குறு, நடுத்தர தொழில்கள்.விவசாயிகள் விவசாயத் தோடு மட்டுமல்லாது வணிக நோக்கில் செயல்பட்டு விவசாய சம்மந்தப்பட்ட தொழில் முனைவோராக மாறிட இந்த எம்.எஸ்.எம்.இ உதவும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

இனி வருங்காலங்களில் படித்த பட்டதாரி உழவர்கள் வாழ்வு மேம்பட இந்த மாதிரியான நிறுவனங்களை அணுகி பயன் பெற வேண்டுகிறோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மாடித் தோட்டம், வீட்டு காய்கறி தோட்டம் குறித்த ஒரு நாள் நிலையப் பயிற்சி

திருச்சி, அக்.8

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் சார்ந்த பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, நமது வீட்டில் காய்கறி தோட்டம் அமைத்து நமக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களுடன் பல தரப்பட்ட மருத்துவ குணங்களைக் கொண்ட காய்கறிகளை நாமே உற்பத்தி செய்து வருடம் முழுவதும் காய்கறிகளை நகர மற்றும் கிராம பொதுமக்கள் பெறும் விதமாக மாடித் தோட்டம் மற்றும் வீட்டு காய்கறி தோட்டம் பற்றிய ஒரு நாள் நிலையப் பயிற்சி 14.10.24 (திங்கள்கிழமை) அன்று நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் எளிய முறையில் மாடித்தோட்டம் அமைப்பது குறித்தும், வீட்டின் அன்றாட தேவைகளுக்கு ஏற்ப காய்கறி தோட்டம் அமைப்பது குறித்தும் விளக்கம் அளிக்கப்பட உள்ளது. வீட்டிலேயே தயாரிக்கப்படும் காய்கறிகளை உட்கொள் வதன் மூலம் நமது அன்றாட ஊட்டச்சத்து தேவை பூர்த்தி செய்யப் படுவதோடு இரசாயனம் இல்லாத உணவு கிடைக்கப் பெறுகிறது.

இந்த பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் 04312962854, 91717 17832, 85088 35287 என்ற எண்ணில் அலுவலக நேரத்தில் (காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை) தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். அல்லது 9171717832 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப் மூலமோ, குறுஞ்செய்தி மூலமோ முன்பதிவு செய்யவும். முன்பதிவு செய்ய கடைசி நாள் 13.10.2024.

கலந்து கொள்ளும் நபர்களுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு : மரக்கன்றுகள் பெற அடங்கல் நகல் மற்றும்ஆதார் நகல் அவசியம் கொண்டு வரவும்.

மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.

# 'வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு' இலவசப் பயிற்சி

கரூர், அக்.8

கரூர் மாவட்டம், மண்மங்கலம் அருகில் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் 'வெள்ளாடு மற்றும் செம்மறியாடு வளர்ப்பு' பற்றிய ஒரு நாள் உள்வளாக பயிற்சி இன்று 9.10.2024 (புதன்கிழமை) இலவசமாக அளிக்கவுள்ளது. விவசாயிகள்/ கால்நடை பண்ணையாளர்கள்/ஆடு வளர்ப்பில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொண்டு ஆடு வளர்ப்பு தொடர்பாக தங்களுக்குள்ள சந்தேகங்களுக்கு தெளிவு பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் காலை 10.30 மணிக்கு எங்களது பயிற்சி மைய வளாகத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புக்கு : 04324 294335 மற்றும் 73390 57073.




# முற்றிலும் நீரில் கரையும் உரம் கால்சியம் நைட்ரேட் !

**கால்சியம் நைட்ரேட்**

கால்சியம் நைட்ரேட்டில் 18.5% கால்சியம் மற்றும் 15.5% தழைச்சத்து உள்ளது.

நீரில் கரையும் கால்சியம் சத்தின் ஒரே ஆதாரம்.

சொட்டுநீர்ப் பாசனம் மூலம் உரமிடுவதற்கும் இலைவழி தெளிப்பிற்கும் உகந்தது.

**பயன்படுத்தும் முறை**

இலைவழித் தெளிப்பாக ஒரு லிட்டர் நீருக்கு 5-10 கிராம் அளவில் கலந்து 10-15 நாட்கள் இடைவெளியில் பூக்கும் பருவம் முதல் காய் உருவாகும் பருவம் வரை 2-3 முறை தெளிக்கலாம்.




சொட்டுநீர்ப் பாசனம் மூலம் உரமிடுவதற்கு ஒரு லிட்டர் நீருக்கு 1.5-2.5 கிராம் வரை உரம் கலக்குமாறு அமைக்க வேண்டும்.

**நன்மைகள்**

அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

பயிரின் வேர், கிளைகள் மற்றும் பூக்களின் வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

பூச்சிகள் மற்றும் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

பூக்கள் மற்றும் காய்கள் உதிர்வதை தடுத்து பயிர்களின் தரத்தை மேம்படுத்தும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# இஞ்சி பயிரை தாக்கும் நோய்கள்

**1.மென்மையழுகல் அல்லது கிழங்கு அழுகல் : பைத்தியம் அப்ஹேனிடெர்மேட்டம்ஃபி.வெக்சன்ஸ்ஃ பி.மைரியேடில்லம்**

**அறிகுறிகள்**

- நோய் தாக்கம் முதலில் போலித் தண்டின் கழுத்துப்பட்டை பகுதியில் தொடங்கி பின் கீழ் நோக்கி பரவி விடும். தாக்கப்பட்ட போலித்தண்டின் கழுத்துப்பட்டைப் பகுதிகளில் நீர் கோத்து மற்றும் அழுகல் வேர்க்கிழங்குகள் வரைபரவும் இது மென்மையழுகலுக் கான அறிகுறிகளாகும்.

- இளம் இலைகளின் முனையில் இளம் மஞ்சள் நிறமாக மாறி அது படிப்படியாக இலைத் தாள்களுக்கு பரவும்.

- இலைகளில் உள்ள மஞ்சள் நிறம் செடிகள் முழுவதும் கீழ் பகுதியில் இருந்து மேற் பகுதி வரை பரவி அதன் தொடர்ச்சியாக வாடி வதங்கி போலித்தண்டுகள் காய்ந்துவிடும்.

**கட்டுப்பாடு**

- விதை வேர்க்கிழங்கை 0.3% மேன்கோசெப்பில் பக்குவப் படுத்தவும். 30 நிமிடங்களுக்கு முன் இந்தக் கரைசலில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். இதை விதைக்கும் முன் ஒரு முறை மறுபடியும் விதைநேர்த்தி செய்தால் நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

- நோயைக் கட்டுப்படுத்த நன்கு வடி மண்ணை தேர்வு செய்து நடவு செய்ய வேண்டும். நீர் தேக்கத்தையும் முன்பே அகற்றி விட்டால் நோய் தாக்குதலில் இருந்து நாற்றுகளை பாதுகாக்கலாம்.

- வேர்க்கிழங்குகளை நோய் தாக்காத தோட்டத்தில் இருந்து தேர்வு செய்ய வேண்டும். ஏனென்றால் விதை வழியாகவும் இந்நோய் பரவும்.

- ட்ரைக்கோடெர்மா ஹார்சியானம், இதனுடன் வேப்பம் புண்ணாக்கு 1கிலோ/படுக்கை இதனை கலந்து இட்டால் நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்கலாம்.

- ஒரு முறை இந்நோய் வயலில் தோன்றினால் உடனே தாக்கப்பட்ட கொத்தை அகற்றி, 0.3% மேன்கோசெப்பை தாக்கப்பட்ட இடத்தை சுற்றி சொட்டுசொட்டாக தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் நோய் பரவுதலை தவிர்க்கலாம்.

## 2 நுண்ணுயிரி வாடல் : ரால்ஸ்டோனியாசொலனாசிரம்

### அறிகுறிகள்

- போலித்தண்டின் கழுத்துப்பட்டைபகுதிகளில் தண்ணீர் போன்று புள்ளிகள் தோன்றும். பின் மேலும், கீழும் பரவி காணப்படும்.

- அடி இலைகள் மிதமாக வாடும், இலைவிளிம்புகள் சுருக்க முற்று காணப்படும். பின் அதுமேல் நோக்கிபரவும்.

- முதலில் மஞ்சள் நிறம் அடி இலைகளில் தோன்றி படிப்படியாக மேல் இலைகள் வரை பரவும். ஆரம்ப நிலை செடிகளில் திடமான மஞ்சள் நிறம் மற்றும் செடி வாடியும் காணப்படும்.

- போலித் தண்டுகளில் உள்ள காற்றுக்குழாய் சார்ந்த திசுக்களில் ஆழ்ந்த கோடுகள் காணப்படும். தாக்கப்பட்ட போலித் தண்டு மற்றும் வேர்க்கிழங்குகளை அழுத்தினால் காற்றுக்குழாய் சார்ந்த பகுதிகளில் இருந்து மெதுவாக பால் போன்ற கசிவு வெளிவரும்.

### கட்டுப்பாடு

- மென்மையழுகலை கட்டுப்படுத்த பயன்படுத்திய அதே முறைகளை பேக்டீரியல் வாடல்க்கும் பயன்படுத்தலாம்.

- விதைக்கும் வேர்க்கிழங்குகளை 200 பிபிஎம் ஸ்ஜட்பரோசைக்லினுடன் 30 நிமிடங்கள் வைத்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். இதனை விதைப்பதற்கு முன் நிழலில் வைத்து உலர்த்தவும்.

- ஒரு முறை இந்நோயை வயலில் கண்டறிந்தால் அனைத்து படுக்கைகளையும் 1% போர்டியாக்ஸ் கலவை அல்லது 0.2% காப்பர் ஆக்ஸில்க்ளோரைட்டை சொட்டு சொட்டாக நனைய விடவும்.

## 3.இலைப்புள்ளி: பிள்ளோஸ்டிக்டா ஜின்ஜிபெர்ரி

### அறிகுறிகள்

- முதலில் தண்ணீர் போன்று புள்ளிகள் தோன்றும் பின் அது வெள்ளை புள்ளிகளாக மாறி ஆழ்ந்த பழுப்பு நிற விளிம்புகள் மற்றும் மஞ்சள் நிற ஒளி வட்டத்தை சுற்றி காணப்படும். நைவுப் புண் பெரியதாகி அடுத்துள்ள நைவுப்புண் ஒன்றாகி காய்ந்த பகுதியாக உருவாகும்.

- மழை பொழியும் போது தொடர்ச்சியாக பெய்யாமல் மழை துளிகள் சிதறடிக்கும் பொழுது நோய்கள் எளிதாக பரவும்.

● இஞ்சியில் நோய் தாக்குதல் திடமாக இருப்பதை நாற்று வளரும் நிலையில் வெளிப்படுத்தும்.

**கட்டுபாடு**

● 0.25% காப்பர் ஆக்ஸில்க்ளோரைட் அல்லது 0.2% மேன்கோ செப்பை தெளித்தால் நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

இதனை **முனைவர் ந.இரஜினிமாலா, இணைப் பேராசிரியர் (பயிர் நோயியல்), நெல் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், அம்பாசமுத்திரம் - 627 401, திருநெல்வேலி, கு.இளஞ்செழியன், இணைப் பேராசிரியர் (பூச்சியியல்) வ.உ.சிதம்பரனார் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கிள்ளிகுளம், தூத்துக்குடி,** தெரிவித்தனர்.



# ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் கிஸான் கோஸ்திஸ்

புதுக்கோட்டை, அக்.8

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாரம் பாண்டி பத்திரம் கிராமத்தில் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டிற்கான உழவர் திரள் பரவலாக்கம் (கிஸான் கோஸ்திஸ்) நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு ஜெயபாலன் வேளாண்மை துணை இயக்குநர் உழவர் பயிற்சி நிலையம் குடுமியான்மலை தலைமையேற்று பேசுகையில் அங்கக வேளாண்மை பற்றிய புதிய தொழில்நுட்பங்களான தமிழக முதல்வரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் என்ற திட்டத்தின் கீழ் இவ்வாண்டு விவசாயிகளுக்கு பசுந்தாள் பயிர் விதைகள் மானிய விலையில் வழங்கப்பட்டு மண் வளத்தை பாதுகாக்கவும் மண்ணில் கரிமசத்து அதிகரிக்க செய்வதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

அங்கக வேளாண்மையில் அதிகளவு மக்கிய தொழு உரங்கள், பண்ணை கழிவுகள், உயிர் உரங்கள், இலை தழைகள், மண்புழு உரங்கள், வேம்பு சார்ந்த பொருட்கள் அதிக அளவு பயன்படுத்தி அங்ககப் பண்ணையம் முறையில் உழவர்கள் விவசாயம் செய்து நஞ்சில்லா உணவு அனைவருக்கும் அளிக்கலாம் என எடுத்துக் கூறினார். வம்பன் பயறு வகை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து வருகை புரிந்த முனைவர் தங்கமணி, அங்ககப் பண்ணையம் முறையில் அனைவரும் சிறிதளவு தங்கள் குடும்பங்கள் சாப்பிடு வதற்காக இயற்கை முறையில் விவசாயம் செய்யவும் மேலும் கூறுகையில் இயற்கை சார்ந்த மருந்துகளான பஞ்சகாவ்யம், ஜீவாமிர்தம், அமுத கரைசல், மீன் அமிலம், பூச்சி விரட்டி தயார் செய்யும் முறைகள் மற்றும் பயன்படுத்தும் முறைகள் பற்றி விளக்கமாக எடுத்து கூறினார்.

ஆவுடையார்கோவில் வேளாண்மை உதவி இயக்குநர் சவீதா அனைவரையும் வரவேற்று பேசுகையில், இந்த ஆண்டு வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், செயல் பாடுகள் மற்றும் வேளாண் கிடங்கில் உள்ள வேளாண் இடுபொருள் கள் அவற்றின் மானியங்கள் பற்றிய விவரங்கள் தெளிவாக எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், உழவர் மக்கள் அனைவரும் அங்கக பண்ணையம் முறையில் விவசாயம் செய்து செலவை குறைத்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என எடுத்து கூறினார். நிகழ்ச்சி முடிவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜகுபர்அலி அனைவருக்கும் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சி ஏற்பாடு களை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கீர்த்திகா மற்றும் ராமநாதன் ஆகியோர்கள் செய்திருந்தனர்.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
• அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
• பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
• மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# இனிப்புத் தயிர் – யோகர்ட் – ஓர் பார்வை

யோகர்ட் என்பது உறையூட்டப்பட்ட இனிப்புச் சுவையுடைய தயிராகும். தயிரைப் பல்வேறு நுண்ணுயிர் கலவைகளைச் சேர்த்து புளிக்க வைப்பதன் மூலம் தயாரிக்கப்படுகிறது. யோகர்ட் தயாரிப்பதற்கு ஸ்ட்ரப்டோகாக்கஸ் தெர்மோ பிளஸ், லாக்டோஃபேசில்லஸ் பல்கேரிக்கஸ் போன்ற நுண்ணுயிர்கள் பயன்படுத்தப்படுகின்றன. நுகர்வோர்களின் உடல்நிலை, கலோரித்தேவை மற்றும் வயதிற்கேற்ப யோகர்ட்டைத் தயாரிக்கலாம். யோகர்ட் தயாரிக்க பசும்பாலே ஏற்றது. கொழுப்பு நீக்கப்பட்ட பாலிலிருந்து தயாரிக்கப் பட்ட யோகர்ட் இரத்த அழுத்தம் மற்றும் கொலாஸ்டிராலைக் குறைக்க வல்லது.

**யோகர்ட்டின் சிறப்புகள்**

யோகர்ட்டிலுள்ள நுண்ணுயிர்கள் பாலில் உள்ள லாக்டோஸ் எனப்படும் சர்க்கரையைச் சிதைத்து அதிகளவில் லாக்டிக் அமிலத்தையும் குறைந்தளவில் குளுக்கோஸ் மற்றும் கேலக் டோஸாகவும் மாற்றுகின்றன. இதனால் இந்த இனிப்புத் தயிரை லாக்டோஸ் ஒவ்வாமை கொண்டநோயாளிகளும் எடுத்துக் கொள்ளலாம். மேலும் இதில் உள்ள நிலை நிறுத்திகள் குடல் அசைவுகளைக் கட்டுப்படுத்தி செரிமானத்தை மேம்படுத்துகின்றன. யோகர்ட்டில் ஃபோலிக் அமிலம், நியாசின் போன்ற உயிர்ச் சத்துகளும், கால்சியம், பாஸ்பரஸ் போன்ற தாது உப்புகளும் அதிகளவில் உள்ளன.

**தயாரிக்கும் முறை**

யோகர்ட் தயாரிக்க சுத்தமான பசும்பால் அல்லது எருமைப்பால் தேவை. முதல்வதாக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் பாலிலுள்ள கொழுப்பு சாரா திடப்பொருள்களின் அளவை 11 முதல் 12 விழுக்காடு வரை உயர்த்த வேண்டும். இங்ஙனம் திடப் பொருள்களின் அளவை உயர்த்துவதற்கு 4 விழுக்காடு அளவில் உலர்ந்த பால் பவுடர் சேர்க்க வேண்டும். 1 லிட்டர் பாலிற்கு 40 கிராம் கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடரைச் சேர்க்க வேண்டும். பிறகு 6 முதல் 10 விழுக்காடு வரை 0.3 விழுக்காடு நிலைநிறுத்தியைச் சேர்க்க வேண்டும். நிலைநிறுத்திகளாக ஜெலட்டின், பெக்டின், சோடியம் அல்ஜினேட் அகார் போன்றவைகளைப் பயன் படுத்தலாம். சிறியளவில் யோகர்ட்டை தயாரிப்பதாக இருந்தால் மேற்சொல்லப்பட்ட கலவையை மிக்ஸியில் இட்டு அடித்து கரைத்துக் கொள்ள வேண்டும். பெரியளவில் யோகர்ட்டை தயாரிப்பதாக இருந்தால் மேற்சொல்லப்பட்ட கலவையை ஹோமோஜினைசரில் இட்டுஅடித்து கரைத்துக் கொள்ளவேண்டும்.

பிறகு பாலை 85 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 30 முதல் 40 நிமிடங்களுக்குச் சூடுபடுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் இந்த வெப்பநிலையில் நோய்க் கிருமிகள் அழிந்துவிடுவதோடு மட்டுமல்லாமல், உருவாகும் தயிர் கெட்டியாகவும் உறைகிறது. தயிர் கெட்டியாக உறைவதற்கும் யோகர்ட்டிலிருந்து நீர் பிரிதலைத் தடுப்பதற்கும் நிலைநிறுத்திகள் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. சூடான பாலை 40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக்கு குளிர வைக்க வேண்டும். அதற்கு அடுத்தபடியாக நுண்ணுயிர்க் கலவையை 1 விழுக்காடு அளவில் பாலுடன் சேர்க்க வேண்டும்.




இங்ஙனம் உறையூட்டப்பட்ட பாலைப் பிறகு கோப்பைகளிலும், குடுவைகளிலும் நிரப்பி 40 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் 4 மணி நேரம் வரை உறைய விடவேண்டும். பின்பு உறைந்த யோகர்ட்டைக் குளிர்சாதனப் பெட்டியில் பாதுகாத்து குளிரூட்டப்பட்ட நிலையில் ஒரு வாரக் காலத்திற்குள் விற்பனை செய்ய வேண்டும்.

**யோகர்ட்டின் வகைகள்**

**பழ வகை யோகர்ட்**

யோகர்ட் தயாரிக்கும் பொழுது, அதனுடன் பழச்சாற்றைச் சேர்த்து பழவகையோகர்ட் தயாரிக்கப்படுகிறது. பழ வகை யோகர்ட்டைக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சாப்பிடலாம். பழவகை யோகர்ட் தயாரிக்க மாம்பழம், பப்பாளிப்பழம், அன்னாசிப் பழம், சப்போட்டா போன்ற பழங்களின் சாற்றை 15 முதல் 20 சதவிகிதளவில் சேர்க்க வேண்டும்.

**உறைநிலை யோகர்ட்**

உறைநிலை யோகர்ட் சாதாரண யோகர்ட்டைப் போல் அல்லாமல் நீண்ட நாட்கள் கெடாதத் தன்மையைப் பெற்றிருக்கின்றது. இதுவும் பனிக்குழைவைப் போன்றே உறைநிலையில் உள்ளபால் பொருளாகும். இது சாதாரண யோகர்ட்டைப் போன்று தயாரிக்கப்படு கின்றது. ஆனால் உறைநிலை யோகர்ட்டை உறை நிலையில் வைத்தே விற்பனை செய்ய வேண்டும்.

**தேவையானவைகள்**

யோகர்ட் தயாரிக்க வீட்டில் சிறிய இடமேபோதுமானது. மிக்ஸி, குளிர் சாதனப் பெட்டி, வெப்பநிலை சீர்படுத்தும் கருவி போன் றவைகளே போதுமானது.

**பொருளாதாரம்**

| | | |
|---|---|---|
| கொழுப்பு நீக்கப்பட்ட பாலின் விலை | : | 25.00 |
| கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் | : | 15.00 |
| சர்க்கரை | : | 5.00 |
| உற்பத்திச் செலவு | : | 25.00 |
| மொத்தச் செலவு | : | 70.00 |

விற்பனை விலை (1 லிட்டர் யோகர்ட் ரூ.200)
நிகர இலாபம் 1 லிட்டருக்கு ரூ.130

தகவல் : **மூ.சுதா, இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத்துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி - 625 534.**